தேவையான உதவிகளைச் செய்ய முன்வருவதற்காக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதிகளில் எந்தவொரு திட்டத்திற்கும் வனத் துறையின் அனுமதி பெற வேண்டும் என்பது ஒன்றுதான் தடையாக இருக்கிறது. வனத் துறையின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் நிச்சயமாக அந்தப் பகுதிகளிலே மின்சார இணைப்பு கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இந்த அரசு உறுதியாக எடுக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

32-

வீடுகள் கட்டுதல்

***32433—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, மணவாளக்குறிச்சி பேரூராட்சி, சின்னவிளையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக புதிய வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக புதிய வீடுகள் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணவாளக்குறிச்சி, சின்னவிளை, பெரியவிளை பகுதிகள் கடற்கரைப் பகுதிகளாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான*

மீனவ மக்கள் அந்தப் பகுதிகளில் வசித்துவருகிறார்கள். 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியினால் அதிகமான வீடுகள் நாசமாகிவிட்டன. மொத்தமுள்ள வீடுகளில் 532 வீடுகள் கட்டப்பட்டு, மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், 84 குடும்பங்கள் கடற்கரையோரத்தில் உள்ளன. மிகவும் ஆபத்தான நிலையில் வாழ்கின்ற அந்த மக்களுக்கு 84 வீடுகளையும் தாங்கள் கட்டிக் கொடுத்தால் அங்குள்ள மீனவ மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வீடு கட்ட நிலத்தைக்கூட அந்த மக்களே தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள 84 குடும்பங்களுக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கக் கோருகிறார். மீனவர்களுக்கு மீன் வளத் துறையின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. வேண்டுமென்றால் அந்தப் பேரூராட்சியில் குடிசைகளில் வசிக்கின்ற மக்களுக்குத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மத்திய அரசிடமிருந்து 16-வது நிதிக் குழுவிலிருந்து நிதி உதவி கேட்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி கிடைக்கப்பெற்றவுடன், குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக பாதிக்கப்பட்ட 84 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க

முன்வந்தால் நான் பாராட்டக்கூடியவனாக இருக்கிறேன் என்று சொல்லி, நன்றி சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கூடலூர் சட்டமன்றப் பேரவை தொகுதிக்குட்பட்ட பந்தலூர் தாலுகாவில் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து பணிபுரிகின்றார்கள். அது எல்லையோர தாலுகா என்பதால் அந்தப் பகுதியில் தங்குவதற்கு அவர்களுக்கு வீடுகள் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. அவர்கள் அந்தப் பகுதியில் தங்கிப் பணிபுரிய ஏதுவாக இல்லாத காரணத்தால் அங்கு அரசுப் பணிகள் சிறப்பாக நடைபெற இயலாத சூழ்நிலை இருக்கிறது. இதை நான் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலும் மாண்புமிகு அமைச்சரிடத்தில் எடுத்துச் சொல்லியிருந்தேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, பந்தலூர் வட்டத்தில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிதாக அலுவலர் குடியிருப்புகள் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் குடியிருப்புகளை மாநில தலை நகரம், மாவட்ட தலைநகரம், கோட்ட தலைநகரங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்களின் எண்ணிக்கைக்கேற்ப, தேவைப்படின் இதய தெய்வம் புரட்சித் தலைவி மக்களின் முதல்வர் அம்மாவின் வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற அரசு கட்டிக்கொடுக்கும்.

2015 பிப்ரவரி 20]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடலூரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கிட்டத்தட்ட, இப்போது 3,112 அரசு வாடகை குடியிருப்புகள் காலியாக இருக்கின்றன. சென்னை தலைநகரத்தில் மட்டும்தான் அரசு ஊழியர்களுக்கு வாடகை வீடுகள் பற்றாக்குறையாக உள்ளன. மற்ற இடங்களில் வாடகைக் குடியிருப்புகள் காலியாகவே இருக்கின்றன. அதற்குக் காரணம் அரசு அலுவலர்களுக்கு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படும் கடன் தொகையை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்திக் கொடுத்ததால், புதிதாக வீடுகள் வாங்கும் திறன் அரசு ஊழியர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. மேலும், ஆறாவது ஊதியக் கமிஷனில் வீட்டு வாடகைப்படி உயர்த்தி கொடுத்ததனால், அரசு ஊழியர்கள் தனியார் வீடுகளையே நாடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி, அங்கு அரசு ஊழியர்கள் எத்தனை பேர் பணிபுரிகின்றார்கள், அவர்களுக்கு வீடுகள் அவசியம் தேவைப்படுகிறதா என்பதை ஆய்வுசெய்து, தேவைப்படின் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவின் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற அரசு வீடுகள் கட்டிக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

இரயில்வே மேம்பாலம்

***34355—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, கடலூர்-சிதம்பரம் நெடுஞ்சாலையிலுள்ள பூண்டியாங்குப்பத்தில் புதிய இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?